# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,104 — 1960 අප්‍රේල් 9 වැනි සෙනසුරාදා — 9.4.1960

12,104 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 9 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

**உணவு விலைக்கட்டளை இல. சீ. 299.** **அரிசி.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொட்டுவே முகாந்திரம் தர்மசேன ஜயனெத்தி ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 13.6.59 ல் வெளிவந்த 11,773 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 ந் திகதியைக் கொண்ட சீ. 286 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலையே, 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் வர்ணனையையும் தரத்தையும் கொண்ட எவ்வரிசியையும் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து விற்கும் ஒரு இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் இவ்விலைக்கு மேல் விற்கக்கூடாதெனவும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையால் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையையும் தரத்தையும் கொண்ட எவ்வரிசியையும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எவ்வரிசியாவது விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலையில், அவ்வாறு விற்கப்படும் அரிசியைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

கொழும்பில் 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 9 ந் திகதி காலை 11.30 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

கே. எம். டி. ஜயனெத்தி,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),

### அட்டவணை

| பத்தி 1<br>வர்ணனையும் தரமும் | பத்தி 2<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கப்படவேண்டிய சில்லறை விலை |
|---|---|
| எல்லா இரக அரிசியும் .. .. | 12½ சதம் |